


வி. ஜி. ஆர்.

தாஸ் வீட்டுக்குத் தென்னண்டைப் புறத்தில் கூரை வேய்ந்திருந்த வீட்டில் வி. ஜி. ஆர். தனியாக இருந்தார். வி. ஜி. ஆர். என் அப்பா ஹைஸ்கூலில் படித்துக்கொண்டிருந்த காலத்தில் ரிடையர் ஆன கணக்கு வாத்தியார். சுமார் 104 வயது இருக்கும் என்று எனக்குத் தோன்றியது. முள்ளு முள்ளாக வெள்ளைத் தாடி, மஞ்சள் காப்பு, திருமண் ஸ்ரீசூர்ணமுமாகப் பளிச்சென்று நாமம். பஞ்சகச்சம், அழுக்குப் பூணூல். அந்த வயசுக்கு ஆரோக்கியமாகவே இருந்தார். அந்த வீடு அவருக்குச் சொந்த வீடு. சின்ன வயசிலேயே மனைவியை இழந்தவர். உறவில் சுவீகாரம் எடுத்திருந்தார் என்று கேள்விப்பட்டேன். அந்த ஆள் மெட்ராசில் ஏதோ ஒரு பாக்கத்தில் இருப்பதாகவும் இவரைக் கூப்பிடக் கூப்பிட அங்கே போவதில்லையென்றும்

சொன்னார்கள். காரணம் வி. ஜி. ஆருக்கு ஸ்ரீரங்கத்தில் செத்துப் போக வேண்டும் என்று விருப்பம். ரொம்பப் பேர் அந்த வகையில் ஸ்ரீரங்கத்துக்கும் வைகுண்டத்துக்கும் குறுக்கு வழி இருப்பதாக நினைத்துக்கொண்டிருந்தார்கள்.

வி. ஜி. ஆரை சாவு லேசில் அணுகுவதாக இல்லை. வீட்டு வாசலில் கயிற்றுக் கட்டில் போட்டுக்கொண்டு மார்கழி மாசம் தவிர மற்ற நாட்களில் வாசலில்தான் தூங்குவார். அதிகாலை எழுந்து வீதிப் பிரதட்சணம், சகஸ்ரநாமம் சொல்லிக்கொண்டே செல்வார். கொள்ளி டத்தில் போய்க் குளிப்பார். சாயங்காலமும் வீதிப் பிரதட்சணம். தானாகவே சமையல் செய்துகொண்டிருந்தவர் சமீபத்தில் முடியாமல் போய் ஆசாரங்களைக் கொஞ்சம் தளர்த்திவிட்டு கிருஷ்ணா கபே ராவ் டிபன் காரியரில் கொண்டுவரும் சாப்பாட்டை ஒத்துக் கொண்டார். சாப்பிட்டுவிட்டுக் கழுகு மாதிரி உட்கார்ந்திருப்பார். கண் பார்வை சற்று மந்தம், காது ரொம்ப டப்பாஸு. ஏதாவது நிழலாடிற்று என்றால் "யார்றாது?" என்பார்.

"வேம்பு மாமா."

"யாரு?"

"வேம்பு மாமா." இது உரக்க.

"எச்சுமி புள்ளையா?"

"ஆமாம் மாமா."

"உங்கப்பா சவுக்கியமா இருக்கானா?"

"அப்பா போன கார்த்திகை மாசம் பரமபதிச்சுட்டார் மாமா."

"ஏதோ சௌக்கியமா இருந்தா சரி. உங்கப்பா இருக்கானே கணக்கில் ரொம்ப மக்கு. போய்ச் சொல்லு அவன்கிட்ட வி. ஜி. ஆர். சொன்னார்னு. ஆஸ்தியரம் ஒண்டிதான் தெரியும். ஆல்ஜிப்ரான்னா பேதி போறது. ரெயில்வேலதானே பொன்மலைலதானே எட்கிளார்க்கா இருக்கான்?"

"அப்பா போய்ட்டார் மாமா போன கார்த்திக்கு. வருஷாப்திகம் கூட வரப்போறது."

"ஏதோ நல்லபடியா இருந்தா சரி. விசாரிச்சதாச் சொல்லு, என்ன?"

"செவிட்டு எழவே, நீயே போய் விசாரிச்சுக்கயேன்" என்று வேம்பு முணுமுணுத்துக்கொண்டே விலகுவான்.

பாட்டி அடிக்கடி வி. ஜி. ஆருக்குக் கண்ணமுது அல்லது பண்டிகைக்கு மெத்து மெத்து பலகாரம் எல்லாம் என் மூலம் டிபன் பாக்ஸில் கொடுத்து அனுப்புவாள்.

"சீனிவாசராகவன் ஸன்தானே நீ?"

"ஆமாம் மாமா."

“மாத்தமாட்டிக்ஸில எவ்வளவு வாங்கியிருக்கே?”

“அது வந்து சுமாரா வாங்குவேன் மாமா.”

“வெரிகுட். அப்படித்தான் இருக்கணும். உங்கப்பா நூத்துக்கு நூத்தம்பது வாங்குவான். பேப்பரை கிளியர் பண்ணிடுவான். என்கிட்டயே தப்புக் கண்டுபிடிச்சான் ஒரு விசை.”

அப்பாவை ஒருமுறை கேட்டதில், “அப்படியெல்லாம் இல்லை. அவர் கிளாஸ் எடுத்ததே கொஞ்சம்தான்” என்றார்.

“அவருக்கு எவ்வளவ்ப்பா வயசு இருக்கும்?”

“ஹி மஸ்ட் பி எபவுட் நைன்ட்டி” என்றார்.

வி. ஜி. ஆர் என் கண் முன்னாலேயே கொஞ்சம் கொஞ்சமாக அழிவதைப் பார்த்தேன். மெல்ல மெல்ல. இதில் உள்ள இரக்கமற்ற தன்மை மிகவும் சாமர்த்தியமாக மறைக்கப்பட்டிருந்தது. ஒரு நாளில் அவர் துன்பப்பட்டு படக்கென்று போய்விட்டார் என்றில்லை. சிறுகச் சிறுகச் செயலிழந்தார். முதலில் வீதிப் பிரதட்சணம் நின்று போயிற்று. பின்னர் கொள்ளிடக் கரைக்குப் போவது நின்று போயிற்று. அதன்பின் மெல்லத் திண்ணையிலேயே உட்கார்ந்திருக்க வாசலில் நிழலாடினால், “யார்ராது? இதைக் கொஞ்சம் நகத்தி வெச்சுட்டுப் போயேன்.”

குளிப்பதற்கும் பென்ஷன் பில்லில் கையெழுத்துப் போடுவதற்கும் சகாயம் தேவையாக இருந்தது. அப்புறம் இடுப்பு வேட்டியைக் கட்டி விடுவதற்கே ஆள் தேவையாக இருந்தது. நடப்பதை நிறுத்திவிட்டு உட்கார்ந்தார், அதன் பின் ஊர்ந்தார். திண்ணையிலேயே பக்கத்திலேயே பாத்திரத்தை வைத்துக் கொண்டார். தனக்குள்ளேயே பேசிக்கொள்ளத் துவங்கினார். ஓரிருமுறை சுவீகாரன் வந்து பார்த்து அவரை மாட்டு வண்டி வைத்துப் பலவந்தமாகத் தூக்கிக்கொண்டு போக எத்தனித்தும் தொடாதே என்னை என்று அழிச்சாட்டியமாகத் தூணைக் கட்டிக்கொண்டுவிட்டார். “என்ன மாமா பண்றது? ரொம்ப வற்புறுத்தினா அழறார். இந்த ஊர்ல செத்துப்போகணும்னு ஆசை!”

செத்துப்போவதற்காக ஒரு வாரம் காத்திருந்துவிட்டு, திரும்ப அவன் தன் மனைவி, குடும்பம், தொழிலை நோக்கி மெட்ராஸுக்கு புறப்பட்டுப் போய்விட்டான்.

ஒருமுறை நான் அவருக்கு டிபன் பாக்ஸில் பாட்டி போளி பண்ணியிருந்ததைக் கொண்டுபோய்க் கொடுத்தேன். ‘மாமா’ என்று காதருகில் கத்த வேண்டியிருந்தது. திரும்பிப் பார்க்க ஒரு நிமிஷ மாயிற்று. “போளி. பாட்டி உங்களுக்குப் புடிக்குமேன்னு கொடுக்கச் சொன்னா” என்று இரைந்து சொன்னேன். அவ்வளவுதான். கண்களில் பொல பொலவென்று கண்ணீர் பிரவாகமிட்டு முகத்தில் முள்ளுத் தாடியில் மறைந்து போக அவர் பேசியது ஒரு வார்த்தை புரியவில்லை. நான் சுற்றிலும் பார்த்துத் திடுக்கிட்டேன். இடுப்பில் வேட்டி

நழுவியிருக்க, தள்ளாடிய சிங்கம்போல இருந்தார். திண்ணையெங்கும் காய்ந்த மூத்திரம் கோடிட்டிருந்தது. பக்கத்தில் ஒரு பக்கெட் மூடியிருக்க இந்தப் பக்கம் உலர்ந்த பாத்திரங்கள். சற்று தூரத்தில் ஒரு ஸ்லேட்டு, 'லோனி'யின் ட்ரிக்னாமெட்ரி புத்தகம், நாலாயிர திவ்வியப் பிரபந்தம்.

பின்னங்கையால் கண்களைத் துடைத்துக்கொண்டு மிக மெல்லிய குரலில், "துரைசாமி பையன்தானே! கணக்கு நன்னா போடறியா? உங்கப்பா கணக்கில் நூத்துக்கு நூத்துப் பத்து வாங்குவான்" என்று அட்சரம் அட்சரமாகக் கழற்றிக் கழற்றிப் பேசினார்.

எனக்கு யார் மேலோ கோபம் வந்தது. ஒரு வேளை ஸ்ரீரங்கத்துப் பெருமாள் பேரில் இருக்கலாம்.

அதன்பின் அவர் இரண்டு தினங்களில் இறந்துபோய்விட்டார். உட்கார்ந்தபடியே ஸ்லேட்டில் ஸைன் தீட்டாவும் காஸ் தீட்டாவும் எழுதியிருக்க பிரபந்தத்தில் திறந்த பக்கத்தில் பெரியாழ்வார்,

'ஆசைவாய்ச் சென்ற சிந்தையராகி
அன்னை, அத்தன், என் புத்திரர், பூமி
வாசவார் குழலாள் என்று மயங்கி
மாளும் எல்லைக்கண் வாய் திறவாதே
கேசவா புருடோத்தமா என்றும்
கேழலாகிய கேடிலீ என்றும்
பேசுவார் அவர் எய்தும் பெருமை
பேசுவான் புகில் நம்பரம்' என்றார்.

வி. ஜி. ஆர். இறந்ததற்குப் பள்ளிக்கூடத்தில் லீவு விட்டார்கள். அவருடைய பழைய மாணவர்கள் பலர் திருவானைக்கோவில், மாம்பழச் சாலை என்று வந்திருந்தார்கள். கோவிலிலிருந்து மாலை, கொட்டு மேளம், சின்ன யானை எல்லாம் வந்திருந்தது. வந்திருந்தவர் எல்லோருக்குமே வி. ஜி. ஆர். கணக்கு வாத்தியாராம். 'என்னமா சொல்லித் தருவார்யா' என்று சித்திரை வீதி முழுக்க பேசிக்கொண்டார்கள். அவரை ஜம் ஜம் என்று நீ முந்தி நான் முந்தி என்று தூக்கிக்கொண்டு திருமங்கை மன்னன் படித்துறையில் எரித்தார்கள். அவருடைய லோனி ட்ரிக்னாமெட்ரி புத்தகத்தில் வி. ஜி. ஆர். நடுங்கும் எழுத்துக்களில் 'டோனேட்டட் டு தி ஸ்ரீரங்கம் ஹை ஸ்கூல் லைப்ரரி' என்று எழுதியிருந்தார். ஸ்ரீரங்கத்தின் பொறுப்புள்ள பிரஜைகள் வி. ஜி. ஆர். பெயரில் ஒரு ஸ்காலர்ஷிப் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று பண உதவி கேட்டு எனக்கு சமீபத்தில் ஒரு அச்சிட்ட கடிதம் வந்தது.

1983